**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண்.938/2023**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17−ம் நாள் புதன்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | செல்வகுமார் | தொழில் |
| த/பெ | சாமிநாதன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் முதல் விசாரணை நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். 18.08.1980 தேதியிட்ட பாகக்கரார் பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1, 26.03.1980 தேதியிட்ட கிரையபத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.2, 28.08.1998 தேதியிட்ட கிரையபத்திரித்தின் பதிவு நகல் வா.சா.ஆ.3, 20.09.2013 தேதியிட்ட கிரையபத்திரத்தின் கணினி நகல் வா.சா.ஆ.4, 14.11.1972 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரித்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5, 28.04.1980 தேதியிட்ட கிரையபத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.6, 17.09.2014 தேதியிட்ட உயில்சாசனத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.7, 31.03.2015 தேதியிட்ட உயில்சாசனத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.8, 11.03.2020 தேதியிட்ட தானசெட்டில்மென்ட் ஆவணத்தின் கணினி நகல் வா.சா.ஆ.9, சாமிநாதன் என்பவரது இறப்பு சான்று கணினி நகல் வா.சா.ஆ.10, சாமிநாதன் என்பவரது வாரிசு சான்று கணினி நகல் வா.சா.ஆ.11, பட்டா எண். 1574 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.12, 18.11.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.13, தாவா சொத்தின் வழிகாட்டி மதிப்பு கணினி நகல் வா.சா.ஆ.14, சாமிநாதன் என்பவரது பெயரிலான ஸ்கேன் பில் வா.சா.ஆ.15 (2 வரிசை), செல்வகுமார் என்பவரது பெயரிலான கிஸ்து ரசீது வா.சா.ஆ.16, பட்டா

எண்.1574 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.17, தாவா சொத்தின் வில்லங்க சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள அரசியல்வாதி யார் அவரது பெயர் என்ன என்று கேட்டால் அது குறித்து எனக்கு தெரியாது என்னுடைய அப்பா சொன்னார். வங்கியில் கடன் பெற்று கல்வி கட்டணம் செலுத்திய காரணத்தினால் ரூபாய் 10 லட்சம் ரூபாய் கல்வி நன்கொடையாக கொடுத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல அது பொய்யாகும். கல்வி கட்டணம் செலுத்துவதற்காக வங்கியில் கடன் பெற்று இருந்தேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் பணிபுரிந்த ஐடி நிறுவனத்திலிருந்து நான் சண்டைபோட்டு வெளியே வந்ததற்கான ஆதாரம் என்ன என்றால் நிறுவனத்தில் இருந்து என்னுடைய அப்பாவுக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள்.

**2.** என்னுடைய அப்பாவின் மனநிலை சரியில்லை என்பதற்கான ஆதாரம் என்ன என்று கேட்டால் அதற்கு ஆதாரம் இல்லை ஆனால் அவருக்கு மனநிலை சரியில்லை என்பது அனைவருக்கும் தெரியும். என்னுடைய தந்தைக்கு மூளையில் கட்டி இருந்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் அதற்கான சிடி ஸ்கேன் பில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவருக்கு அதனால் எந்த விதமான உடல் நிலை அல்லது மனநிலை பாதிப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மது அருந்த மாட்டேன் என்றாலும் சீட்டு விளையாட மாட்டேன் என்று சொன்னாலும் சரியல்ல. என்னுடைய நண்பர்கள் யார் என்று கேட்டால் சிவக்குமார், மணிவண்ணன் மற்றும் பலர் ஆவர். மேற்படி சிவக்குமார் சின்ன தாராபுரத்தை சேர்ந்தவர். என்னுடைய என்னுடைய அத்தை தான் பராமரித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஊரில் விவசாயம் செய்து வருகிறேன் என்பதை காட்ட ஆதாரம் உள்ளதா

என்றால் இல்லை சாட்சிகள் உள்ளது. நான் விவசாயம் செய்வதில்லை என்றாலும் நகரத்தில் தான் குடியிருக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.17 18:34:13 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.